[1973 மார்ச் 21

புகையிலை தீவிர சாகுபடித் திட்டம்.

*456. வினா—திரு. எஸ். கணேசன் : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

நடப்பாண்டில் தமிழ்நாட்டில் புகையிலை தீவிர சாகுபடித் திட்டத்தின் கீழ் செலவிடப்படவிருக்கும் தொகை எவ்வளவு ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : நடப்பாண்டில் தமிழ்நாட்டில் புகையிலை தீவிர சாகுபடித் திட்டத்திற்கு ரூ. 1,15,375 நிதி ஒதுக்கீடு செய்யப் பட்டுள்ளது.

திரு. எஸ். கணேசன் : தலைவரவர்களே, எவ்வளவு ஏக்கர் நிலத்தில் அந்தப் புகையிலை சாகுபடி செய்யப்பட்டிருக்கிறது ? ஒரு ஏக்கரில் புகையிலை உற்பத்தி செய்தால் லாபம் எவ்வளவு வரும் என்று மதிப்பிடப்பட்டிருக்கிறது என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : தலைவரவர்களே, கோவை மாவட்டத்தில் வாய் புகையிலை சுமார் 16,000 ஏக்கர் பரப்பளவில் இத்திட்டத்தின் மூலம் பயிர் செய்யப்படுகிறது. இத்திட்டத்திற்காக கூட்டுறவுத் துறையின் மூலமாக ஒரு ஏக்கருக்கு ரூ. 425 வரை கடன் வழங்கப்படுகிறது. அதிலே பூச்சி மருந்துக்காக ரூ. 15-ம், உரத்திற்காக ரு. 135-ம், ரொக்கமாக ரூ. 275-ம் வழங்கப்படும். மாதிரி நிருபணங்களுக்கு மானியம் ஒவ்வொரு நிருபண வயலுக்கும் ரூ. 50 வீதம் உழவர்களுக்கு வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் உள்ள தொழில் நுட்ப உதவியாளர் எல்லாப் புகையிலை பயிரிடும் விவசாயிகளையும் நேரில் சென்று பார்த்து, நவீன விஞ்ஞான சாகுபடி முறைகளை அவ்வப்போது வழங்கி வருகிறார்கள்.

திரு. கி. சி. ஆ. சிவப்பிரகாசம் : தலைவரவர்களே, இப்போது பீடி சுற்றுவதற்கான புகையிலை குஜராத், மைசூர் போன்ற மாநிலங்களிலிருந்துதான் வருகிறது. அதை தமிழ் நாட்டில் வளர்ப்பதற்காக ஏதாவது செயற்குறிப்பு இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : இது வாய்ப் புகையிலை பற்றியது. பீடி புகையிலைப் பற்றி கனம் உறுப்பினர் அவர்கள் தகப்பனர் காலத்திலேயே ஒரு திட்டம் தயாரிக்கப்பட்டு, அது சரியாக வரவில்லை என்பதால் கைவிடப் பட்டிருக்கிறது.

1973 மார்ச் 21]

திரு. ஏ. எம். இராஜா: தலைவரவர்களே, நம்முடைய தமிழ்நாட்டில் சிகரெட்டுக்கான உயர்ரகப் புகையிலை வளர்க்கப்படுகிறதா, இல்லையென்றால் அந்தப் புகையிலையை வளர்ப்பதற்கு வழிவகை செய்வதற்கு அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: தலைவரவர்களே, தற்போது சிகரெட்டுக்காக புகையிலை வளர்க்கப்படுகின்ற திட்டம் இல்லை. ஆனால் தருமபுரி மாவட்டத்தில் சிகரெட் தயாரிப்பதற்கான ஒரு தொழிற்சாலையை ஏற்படுத்துவதற்காகவும், அதற்காக புகையிலை பயிரிடவும் தீவிரத் திட்டம் தயாரிக்கப்பட்டு, மத்திய சர்க்காரின் அனுமதிக்காக அனுப்பப்பட்டிருக்கிறது.

திரு. ப. முத்துசாமி: தலைவர்வர்களே, நல்ல தரமான புகையிலை வளர்ப்பதற்காக தீவிர சாகுபடித் திட்டத்தை ஏற்படுத்தியிருக்கிறார்கள். மற்றவற்றிற்கு ரிசர்ச் இன்ஸ்டிடியூட் மூலம் விதை தயாரித்துக்கொடுப்பது போல், இதற்கும் விதை தயாரிக்கும் பண்ணை ஒன்றை ஏற்படுத்தி, சில ஏக்கர்களை அரசே ஏற்று நடத்தி, நல்ல விதைகளைத் தயாரித்துத் தருவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: தற்போது கனம் உறுப்பினர் அவர்களின் தொகுதியான வேடசந்தூரில் அந்தத் திட்டம் நடத்தப்பட்டு வருகிறது. மேலும் தமிழக அரசின் சார்பாக அதை விரிவு படுத்த நடவடிக்கை எடுப்பது பற்றி ஆலோசனை பெறப்பட்டு வருகிறது.

நெல் கடத்தல்

* 457. **வினா—திரு. என். கிட்டப்பா:** மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

நெல் கடத்தலைத் தடுக்க "மக்கள் குழு படை" அமைக்க அரசிடம் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: இல்லை.

திரு. கே. டி. கே. தங்கமணி: சார், இம்மாதிரியாக நெல்லும், அரிசியும் அதிகப்படியாக கேரளாவிற்கு, குறிப்பாக ஆந்திரத்திலிருந்து வந்த நெல்லூர் அரிசியும், சென்னையில் இருக்கக்கூடிய நெல், அரிசி எல்லாம் நூற்றுக்கணக்கான